மூன்றாவது உலகப் போருக்கு அச்சாரம் போடப்படுகிறது!

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

33

மலர் 1] சென்னை (13—4—50) ❖ வெளியூர் (14—4—50) [இதழ் 223

ரஷியாமீது அமெரிக்க போர் விமானம்!

ஒன்றை யொன்று தாக்கிக் கொண்டன

அமெரிக்கா மீது ரஷியா குற்றச்சாட்டு

செய்தி தவறானது என்கிறது அமெரிக்க சர்க்கார்

———(o)———

மேற்கில் போர்க் குறிகள் தோன்றுகின்றன

ஏப்ரல் 8-ம் தேதி மாலை 5 மணி 39 நிமிஷமிருக்கும் போது, லிப்பாவாவிற்குத்தெற்கே நான்கு இயந்திரங்களுடன் கூடியதும், அமெரிக்க அடையாளங்களை உடையதுமான விமானம் காணப்பட்டது. இந்த விமானம் சோவியத் நாட்டை ஊடுருவிச் சென்றது.

அமெரிக்கவிமானம்தன் நாட்டை ஊடுருவிவந்து கொண்டிருப்பதை அறிந்தவுடன், அருகிலிருந்த விமான தளத்திலிருந்து சோவியத் போர் விமானம் ஒன்று கிளம்பி, அமெரிக்க விமானத்தைக் கீழிறங்கும்படி அறிவிக்க, அமெரிக்க விமானம் அதற்கிணங்க மறுத்து சோவியத் விமானத்தின் மீது தனது தாக்குதலை ஆரம்பித்தது.

இதன் விளைவாக சோவியத் போர் விமானமும் திருப்பித் தாக்க ஆரம்பித்தது. அமெரிக்க-சோவியத் விமானங்களுக்கிடையே சிறிது நேரம் தாக்குதல் நடைபெற்றது. பின்னர் அமெரிக்க விமானம் கடற் பக்கமாகத் திரும்பி மறைந்து போயிற்று.

இது, நன்கு ஆராய்ந்த பின்னர் வெளியிடப்பட்டுள்ளதாகச் சொல்லப்[illegible] ரஷிய செய்[illegible]

இச்செய்தியில், அமெரிக்கா சர்வதேச சட்ட திட்டங்களையே மீறி விட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகஅமெரிக்க சர்க்கார் ஆராய்ந்து வருவதாகவும் உத்தியோகப் பூர்வமாகத் தங்களுக்கு ஏதும் தெரியாதென்றும் சொல்லுகின்றனர். யு. எஸ். விமானப் படை அதிகாரி ஒருவர், இது முற்றிலும் தவறான செய்தி என்கிறார்.

எது எப்படி இருந்தபோதிலும், இச் செய்தி மூலம் நாம் அறியக் கூடிய அடிப்படை உண்மை ரஷியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மனக் கசப்பு முற்றி, கைகலப்பு நேரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதேயாகும்.

இரண்டாவது உலகப்போர் முடிந்த நாள் முதல் அமெரிக்க—சோவியத் மனக் கசப்பு ஆரம்பமாகிவிட்டது. அந்த மனக் கசப்பு நாளடைவில் முற்றிக்கொண்டே வருகிறது என்பதும் உலகறிந்த செய்தியாகும். அதிலும் கடந்த இரண்டு மாத காலமாக இந்நிலை மிக மிக மோசமாகி வருகிறது என்பது, சர்வதேச அரசியல் நிலையைச் சற்று கூர்ந்து கவனித்தால் புலனாகும்.

ஐரோப்பாவிலே ஜெர்மனி, ஆசியாவிலே இந்கோ—சீனா பார்மோசா, காஷ்மீர் முதலிய இடங்களில் நடைபெற்று வரும் போராட்டங்களைச் சற்றுக் கூர்ந்து நோக்கினால்,

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

கம்யூனிஸம் பரவுவதை நிறுத்தவேண்டுமாம்

சிலி தூதுவர் மிரட்டல்

நியூயார்க், ஏப். 12—

உலகில் கம்யூனிஸம் பரவுவதைத் தீவிர முயற்சி செய்து தடுக்கவேண்டும் என்றும், உலகிலுள்ள நாடுகளின் பொருளாதார சமூக நிலைமை மேம்படச்செய்ய பெரும் கைத்தொழில் நாடுகள் முயலவேண்டும் என்றும், யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள சிலி தூதுவர் ஹெர்னான் ஸாண்டகிரஸ் எச்சரித்திருக்கிறார்.

ஜனநாயக நாடுகள்—முக்யமாக அமெரிக்கா இன்றைய தேவைகளை உணர்ந்து, ஐ. நா. வின் டெக்னிகல் உதவித் திட்டத்திற்கு முதல் சலுகையைக் கொடுத்து நடத்தி வைக்க வேண்டும் என்று கூறினார்.

போலீஸ்-மாணவர்கள் கைகலப்பு

இஸ்தான்புல், ஏப். 12—

பிரபல துருக்கித் தலைவர் மார்ஷல் சாக்மாக் இறந்ததை யொட்டி அவருக்கு மரியாதை தெரிவிப்பதற்கு ரேடியோக்களில் சங்கீத நிகழ்ச்சிகள் எதுவும் கூடாதென துருக்கி மாணவர்கள் வற்புறுத்தினர். இதற்கு ரேடியோ அதிகாரிகள் இணங்காததால் சுமார் 10,000 மாணவர்கள் கொண்ட கோஷ்டி ரேடியோ நிலையத்தைக் கைப்பற்ற முயற்சித்தது. இதைத் தடுக்க போலீசாரும், துருப்புகளும் முயன்றதில் இருதரப்பினருக்கும் கோர சண்டையே மூண்டுவிட்டது.

கிழக்கில் கம்யூனிஸத்தை தடுக்கும் முயற்சி

ஆஸ்திரேலியா வற்புறுத்துகிறது

ஸிட்னி, ஏப். 12—

கிழக்கில் கம்யூனிஸம் பரவுவதைத் தடுக்கும் பொறுப்பு, யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து காமன்வெல்த்வசம் மாறவேண்டும் என்று ஆஸ்திரேலியாவில் வற்புறுத்தப்படுகிறது.

கொள்கையில் புதுமாற்றம் ஏற்பட்டால் ஒழிய, ஆஸ்திரேலியாவையும், இந்தியாவையும் கம்யூனிஸ்டு ஆபத்திலிருந்து காப்பாற்ற முடி[illegible]தென்று இவ்வட்டாரங்க[illegible] கூறப்படுகிறது.

அமெரிக்க ஒத்துழைப்பு அவசியமே என்று ஆஸ்திரேலிய அயல்நாட்டு மந்திரி பெர்ஸிஸ்பெண்டர் கூறினாலும், அமெரிக்கா போதிய உறுதி காட்டாததினாலேயே தான், கம்யூனிஸம் ஆசியாவில் பரவலாயிற்றென்று அதிகார வட்டாரங்களில் கூறப்படுகிறது.

தென்கிழக்கு ஆசியாவில் ஆஸ்திரேலியாவும், நியூஜிலந்தும் அதிக பொறுப்பு ஏற்க வேண்டும் என்று நியூஜிலாந்தில் ஆஸ்திரேலியாவின் தூதுவரான கட்லர் கூறுகிறார்.

பார்லிமெண்டிலிருந்து மறைந்த பொருள்கள்

லண்டன், ஏப். 12—

1945 ஜூலை முதல் பார்லிமெண்டைச் சேர்ந்த 5751 சாமான்கள் காணாமல் போயிருக்கின்றனவென்று கூறப்படுகிறது. இவைகளின் மதிப்பு எவ்வளவு என்று இன்னும் நிச்சயமாக்கப்படவில்லை.

தெ. ஆ. இந்திய மலர் வியாபாரிகளுக்கு ஆதரவு

ஜோஹென்னஸ்பர்க், 12—

நகரின் முக்ய பாகங்களில் இந்தியர் புஷ்பம் விற்கக்கூடாது என்ற ஜோஹென்னஸ்பர்க் நகரசபை தீர்மானத்தை இந்தியர் ஆட்சேபித்ததின் விளைவாக நகர கௌன்ஸில் 'ஓர்க்ஸ் கமிட்டி'யின் அடுத்த கூட்டத்தில் இவ்விஷயம் மீண்டும் ஆலோசிக்கப்படவிருக்கிறது. புஷ்பம் விற்கும் இந்தியர்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரித்து, ஆயிரக்கணக்கான மக்கள் கையெழுத்திட்ட மகஜர் அனுப்பியிருக்கின்றனர்.

இந்தியா - பாகிஸ்தானில் [illegible]மைதி நிலவவேண்டும்

நேரு-லியாகத் உடன்படிக்கை பற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள்

லண்டன், ஏப். 12—

நேரு-லியாகத் ஒப்பந்தத்தை வரவேற்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் இருநாட்டின் தலைவர்களையும் பாராட்டித் தலையங்கங்கள் எழுதியிருக்கின்றன.

கிழக்கில் ஞானோதயம், பிரமாதமான ராஜதந்திரம், என்றெல்லாம் தலைப்புகள் கொடுத்து அப்பத்திரிகைகள் பிரசுரித்திருக்கின்றன.

"இருண்ட வானத்தில் வெளிச்சம் தெரிய ஆரம்பித்திருக்கிறதென்றும், இது உண்மை பொழுதுவிடியும் வெளிச்சமாகவேஇருக்கவேண்டும்" என்று ஒரு பத்திரிகை எழுதியிருக்கிறது.

மாஞ்செஸ்டர் கார்டியன் பத்திரிகை எழுதுகையில் பண்டிட் நேருவும், லியாகத்அலியும் தங்கள் ராஜிய மேதையினால் யுத்தம் ஏற்படாது என்ற நிலைமையை ஏற்படுத்தியதுடன், இந்தியா-பாகிஸ்தானிலுள்ளவர்களுக்கு மட்டுமின்றி தென்கிழக்கு ஆசிய மக்களிடையேசுபிட்சமேற்படும். ஏற்படுவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது.

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் அமைதி நிலவினால்தான், தென்கிழக்கு ஆசியாவில் சுபிட்ச நிலைமை ஏற்படமுடியும் என்றும் அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

கிளாஸ்கோ ஹைரால்ட் இது பற்றி எழுதுகையில், காஷ்மீர், மத்தியஸ்தரை இருநாடுகளும் அங்கீகரித்திருப்பது இருநாடுகளுக்கிடையே நல்லுறவு ஏற்பட பரஸபர ஆவல் இருப்பதையே காட்டுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறது.

பொதுவாக பத்திரிகைகள் எழுதுகையில் ஆபத்து பூராவாக ஒழிந்துவிடவில்லை என்றும், காஷ்மீர் இன்னும் ஒரு பெரும் பிரச்னையாகவே இருந்துவருகிறதென்றும்இப்பொழுது மைனாரிட்டி விஷயமாக ஏற்பட்ட உடன்பாடுபோல் இதர தகராறுகள் உள்ள விஷயங்களிலும் நேருவும், லியாகத்தும் ஒரு உடன்படிக்கைக்கு வந்தால் அவர்கள் தங்கள் நாடுகளுக்கு மட்டுமின்றி மனித வர்க்கத்திற்கே நன்மை செய்தவர்களாவர் என்று குறிப்பிட்டிருக்கிறது.

செஞ்சீனாவின் விமானப் படைபலம் வலுக்கிறது

———(o)———

போர்மோசா திடீர் தாக்குதலுக்குள்ளாகலாம்

ஹாங்ஹாங், ஏப். 12—

சீனகம்யூனிஸ்டுகளின் விமானப்படைபலம் அதிகரித்து வருகிறதென்றும், குறைந்தது 100 சண்டை விமானங்கள் அவர்கள் வசமிருக்கலாம் என்றும் இங்கு நம்பப்படுகிறது.

ஷாங்கே, நான்கிங், ஷூசோ ஆகிய இடங்களில் இவை இருப்பதால், போர்மோஸா மீது இவை திடீரென எப்பொழுது வேண்டுமானாலும் தாக்குவது சாத்தியமென்றும் கூறப்படுகிறது.

இப்பொழுது எவ்வித சண்டையையும் போடுவதற்கு கம்யூனிஸ்டு விமானப்படை தயாராக இல்லை. திடீர் தாக்குதலில் போர்மோஸாவிலுள்ளதேசிய விமானங்கள் எல்லாவற்றையும் நாசம்செய்துவிடவேண்டியதே தன் எண்ணம் என்று தெரிகிறதாகவும் கூறப்படுகிறது.

கம்யூனிஸ்டு சீனாவின் விமானப்படை அதிகரிப்பு போர்மோஸாவுக்குமட்டுமின்றி தென்கிழக்கு ஆசியாவுக்கு ஆபத்தாகும் என்று சில விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

செஞ்சீனாவுக்கு ரஷ்யா உதவிவருவதை ஆட்சேபித்து தேசிய சீனா ஐ. நா.வில் புகார் தாக்கல் செய்திருக்கிறது.

மாலை மணி

சென்னை 13—4—50 வியாழக்கிழமை

கருப்பும் வெள்ளையும்!

ரத்வில்லியம்ஸ்—அவள்ஒரு சாதாரண லண்டன்டைபிஸ்ட், அதாவது டைப் அடிக்கும்ஒரு குமஸ்தா! ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள், ஏதோ வயிற்றுப் பிழைப்பு நடத்தியாக வேண்டுமே என்று தொழில் செய்துவந்தாள்.

ஆப்ரிக்கா ஒரு இருண்ட கண்டம்; அங்கு வாழும் மக்கள் கருப்பர்கள்—நீக்ரோக்கள். கலாசாரம் அவர்களுக்குப் பாரம்பரியமல்ல, கற்றுக்கொண்டார்கள் வெள்ளையரிடம். பெக்குவானலந்து என்னும் பகுதி, தென் ஆப்ரிக்காவில் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட ஒரு கருப்பர் நாடாகும். அக்கருப்பர் நாட்டு மன்னன் ஆகவேண்டிய செரட்சி காமா ஆக்ஸ்பர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவன். சட்டம் பயில லண்டன் வந்தான். படித்த காரணத்தால், பணம் பெற்றக் காரணத்தால் மெருகுள்ள மேனியுள்ளவன் காமா. கருப்பன் ஆனாலும், காதலிக்கச் சம்மதித்தாள வெள்ளை மாது ரத்வில்லியம்ஸ். காதல், கனிவு பெற்று வாழ்க்கை ஒப்பந்தத்தில் முடிந்தது!

செரட்ஸிகாமா ஒரு சாதாரண நீக்ரோவல்ல. ஒரு நாட்டை ஆளப்போகிறவன், அதுவும் வெள்ளையருக்குக் கப்பம்கட்டும் பெக்குவானலந்தை. இந்நாட்டுவாசி,யாரும் இதுவரை வெள்ளைமாதை மணந்ததில்லை. அதனால் செரட்சி காமா செய்கைக்குப் பலத்த எதிர்ப்பு இருக்குமென்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறிற்று. ஆனால், அப்படிப்பட்ட நிலை செரட்சிகாமா தன் மனைவியுடன் தாய் நாடு சென்றபோது ஏற்படவில்லை. மக்கள் ஆதரவோடு வரவேற்றனர். மழையற்றப் பெக்குவானலந்தில் பலத்த மழை பெய்தது. வெள்ளை மாதை சுதேசிகள் 'வருணதேவி' என்றழைத்தனர்!

ஏதோ கலந்தாலோசிக்க வேண்டுமென்று லண்டனுக்கு அழைத்தனர் செரட்சி காமாவை. நம்பிச் சென்றவரை நாடு திரும்பக்கூடாதென்றனர்; ஐந்தாண்டுகள் நாடு கடத்தப்பட்டுள்ளாரென்று, அறிவிக்கப்பட்டார் தொழில் கட்சி சர்க்காரால்.

தென்ஆப்ரிக்காவில்மலான், நிறவெறியாட்சி நடத்துகிறன். நீக்ரோ ரத்தம் பத்தில் ஒரு பங்கு இருந்தால்கூட வெள்ளையரோடு வாழ்க்கை ஒப்பந்த உறவு வைத்துக்கொள்ளக் கூடாதென்றன்.வெள்ளையரை 'வேதியர்'என்றன்;கருப்பரைப் 'பறையர்கள்' ஆக்கினன். அவன் ஆட்சி நடத்தும் தென் ஆப்ரிக்கா சாமன்வெல்த் நாடுகளில் ஒன்று செரட்சிகாமா ஒருவெள்ளை மாதை மணந்து, தான் எழுப்பி வரும் நிறவேற்றுமை என்னும் சுவற்றை இடித்துத்தள்ளியது மலானுக்கு மயக்கம் தந்திருக்க வேண்டும். உடனே பிரிட்டிஷ் பிரதமர் அட்லியைக் கூப்பிட்டு செரட்சிகாமா விவகாரத்தை ஆதரித்தால் அசற்றி விடுவேன் காமன்வெல்த்திலிருந்து' என்று பயமுறுத்தியிருப்பார். பயந்து, பணிந்துவிட்டார் அட்லி லண்டனுக்குக் கூப்பிட்டு நாடு திரும்பக் கூடாதென்று உத்தரவிட்டார்.

சர்ச்சில் கட்சிஆட்சிநடத்திக் கொண்டிருந்தபோது இவ்வாறு நடந்துகொண்டிருந்தால், சங்கடப்பட்டிருக்கமாட்டார்கள் முற்போக்கு மனம் படைத்தோர். சோஷலிஸ்டுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்கட்சியினர் கருப்பு, வெள்ளை என்ற காரணத்திற்காக வாழ்க்கை ஒப்பந்தத்தில் தலையிடுவதா? எக்கொள்கை கொண்டவரானலும் நிறத்துவேஷம் மட்டும் போகாதா என்று அறிவுடையோர், ஆராய்ச்சிமனம் படைத்தோர் எண்ணிப்பார்க்க ஆரம்பித்தனர்.

உலக மக்கள்,ஏன் பிரிட்டிஷ் மக்கள்கூடத் தொழிற் கட்சி சர்க்கார் செய்கையை வன்மையாகக் கண்டித்தனர். அட்லி மெஜாரிட்டி ஆட்டம் கொடுக்க ஆரம்பித்தது. சர்ச்சில்கூட எதிர்க்கவேண்டும் என்ற காரணத்தால், தொழிற் கட்சியை வெளியேற்றிவிடவேண்டுமென்ற காரணத்தால் செரட்சி காமாதடைசெய்யப்பட்டதைத் தாக்கிப் பேசினர். பெக்குவானலந்து மக்கள் வெள்ளையருடன் ஒத்துழையா இயக்கத்தை ஆரம்பித்தனர். லண்டனிலுள்ள கருப்பு மக்கள் ஒன்றுகூடி வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றினர்கள். பெக்குவானலந்தைக் கைப்பற்றி, மலானிடம் ஒப்படைக்கத் தொழிற் கட்சி அரசாங்கம் முயலுகிறதென்று வெளிப்படையாகவே கூறினர்கள்.

வளைந்துகொடுத்தார் அட்லி! செரட்சி நாடு திரும்பலாமென்று அறிவித்தார். அந்த மட்டிலாவது உணர்ந்தாரே என்று மனமகிழ்ந்தனர் முற்போக்காளர்.

நடந்ததென்ன? நாட்டு எல்லையில் உள்ளே நுழையக் கூடாதென்று கூறிவிட்டார் வெள்ளை கவர்னர்! நாடாளும் மன்னன், கருப்பன் என்ற காரணத்தால் இந்நிலையடைய நேரிட்டால், சாதாரணநீக்ரோக்களின் கதி என்னவோ?

கோயில் நுழைவு மசோதா சட்டமாயிற்று

திருவனந்தபுரம், எப். 12—

கொச்சி கோயில் நுழைவுச் சட்டம் விவாதமின்றி திருவாங்கூர் கொச்சி சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

இக்நூதன ஸ்தாபனங்கள் மசோதா செலக்ட் கமிட்டி சிபார்சுப்படி முதல் மந்திரி தோழர் டி. கெ. நாராயணப் பிள்ளை சமர்ப்பித்தார்.

மூன்றாவது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடங்களில் ஏதேனும் ஓர் இடம் மூன்றாவது உலகப் போருக்கு வித்தூன்றும் இடமாக அமையக் கூடும் என்பது தெரிய வரும்.

இங்ஙனம், உலகின் நாலா பக்கங்களிலும் உருத்துத்திரண்டு வரும் போர் மேகங்கள் எந்த நேரத்திலும் போராகப் பொழியக்கூடும் என்பதை விளக்கிக் காட்டவல்ல நிகழ்ச்சியே, அண்மையில் ரஷியநாட்டின் மீது அமெரிக்க ரஷிய போர் விமானங்களுக்கிடையே நேர்ந்த மோதுதல் என்றால் அது மிகையாகாது. அமெரிக்க விமானம் ரஷிய விமானத்தின் மீதும், ரஷிய விமானம் அமெரிக்க விமானத்தின் மீதும் கக்கிய கனல்கள் அடுத்துப் போர் மழை பொழியப் போகின்றது என்பதைக் காட்டவல்ல மின்னல் ஆகவும், இரு விமானங்களுக்கிடையெழுந்த வெடியோசை இடியோசை ஆகவும் காட்சி தந்திருக்கின்றன.

இப்படி, நீண்ட நாட்களாக அடக்கி வைக்கப்பட்டிருந்த போர் எழுச்சி வெளிப்பட்டதை அமெரிக்கா ஏதேதோ காரணங்கள் காட்டி மறைக்கப் பார்க்கின்றன! ரஷியா தங்களுடைய விமானம் சென்றதாகச் சொல்லப்படும் செய்தியே தவறு என்று சொல்லி, விஷயத்தை மழுப்புகிறது, அமெரிக்க சர்க்கார்.

ஆனால் இவர்கள் எவ்வளவுதான் மறைத்தபோதிலும், [illegible]வில் விஷயம் வெளி[illegible]போவதென்னமோ உறுதி தாக்குதலுக்குட்பட்ட விமானங்கள் இருசாராரையும் "போருக்கு எழு!" என்று எழுச்சியூட்டிக்கொண்டேயிருக்கும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. அதிலும் ரஷியா, அமெரிக்க விமானத்தின் அத்துமீறிய செயலை எண்ணிப்பார்க்கும் நேரத்திலெல்லம், ஐ. நா. சபையில் அமெரிக்கா, பிரிட்டன் முதலிய வல்லரசுகள் செய்த—செய்து வரும் ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும் அதன் அகக் கண்முன் தோன்றுமலிருக்காது. அதன் விளைவு போராக இல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

எனவே; சுருங்கச் சொல்ல வேண்டுமானல் அமெரிக்க, ரஷியா என்னும் இவ்விரு வல்லரசுகளும் போருக்குச்செல்ல ஆயத்தமாகிவிட்டன என்றே சொல்லவேண்டும்.

நேபிள்ஸ் துறைமுகத்தில் பலத்த பாதுகாப்பு

ரோம், எப். 12—

நேபிள்ஸ் துறைமுகத்தில் யு.எஸ். ராணுவ தளவாட உதவி வந்துசேருவதை உத்தேசித்து, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் அப்பிரதேசத்தில் செய்யப்படுகின்றன.

அட்லாண்டிக் ஒப்பந்த நாடாக இதாலி இருப்பதினலேயே இந்த உதவி கிடைக்கவிருக்கிறது.

கம்யூனிஸ்டு தூண்டுதலின்பேரில் கடைசி நிமிஷத்தில துறைமுகத் தொழிலாளர்கள் ஸ்டிரைக் ஏற்பட்டால் ஆயுத சாமான்களை இறக்கும் பொறுப்பை ராணுவ என்ஜினீயர்களே ஏற்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மிலானில் இதாலிய தலைவர் தங்கியிருக்கும் 24 மணி நேரத்திற்கும் பலத்த பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அணுகுண்டு ஆராய்ச்சி வளர்ந்த விதம்

ஜீலஸ்வெர்னே வெளியிட்டிருக்கும் தகவல்கள்

பாரிஸ், ஏப். 12 —

ஜீலஸ்வெர்னே என்ற பிரெஞ்சு நாவலாசிரியர் எழுதிய புத்தகங்கள் சென்ற 100 வருஷ காலமாக அகப்படாதிருந்தது இப்பொழுது கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

நம்பமுடியாத விஞ்ஞான விஷயங்களைப்புகுத்திகாதல்கதைகளைப்புனைவதில் இவர் செட்டிக்காரர் என்றும், இவர் நாவல்களைப் படிப்பதில் யுவர்கள் பேரார்வம் காட்டிவருவதாகவும் சொல்லப்படுகிறது.

இப்பொழுது 'கண்டெடுக்கப்பட்டுள்ள இவர் புத்தகத்தின் பெயர் 'அடாப்டட்ஸன்' (தத்துப் பிள்ளை) என்பதாகும்.

சீக்கிரமே பிரெஞ்சு நாடகமேடையில் இந்நாவல் நாடகமாக நடிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

இவர், தான் எழுதிய ஒரு புத்தகத்தில் அணுக்குண்டு பற்றிய விவரங்களை எல்லாம் வர்ணித்திருக்கிறாம். அணுவை பிளப்பது குறித்து மற்றொரு புத்தகத்தில் விஸ்தரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஜீலெஸ்வெர்னேயின் கதைகள் அடங்கிய ஒரு தொகுதியை மார்ஷல் ஸ்டாலின் எப்பொழுதுமே தன் தலைமாட்டில் வைத்துக்கொண்டிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது.

ஏப். 14க்குப் பதில் ஏப். 20

புதுடில்லி மாநாடு ஒத்திவைக்கப்படுகிறது

இந்துசட்டதிருத்தமசோதாவை ஆதரித்து, ஏப்ரல் 14-ல் புதுடில்லியில் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் நடத்த இருந்த மாநாடு 20-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

சென்னை வழக்கறிஞர் கழகத் தலைவர் தோழர் குட்டிகிருஷ்ண மேனன் அவர்கள் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டு இருக்கிறார்.

இந்து மாதர் கழகம், டாக்டர் அம்பேக்காருக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளது. அதில் மேற்படி மாநாட்டை மேலும் மூன்று மாதகாலம் ஒத்திப் போடும்படி வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

குற்றம் செய்வோரின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிக்கிறது

வசூலித்த அபராதத் தொகை மட்டும் ரூபாய் 58 [illegible]

சென்னை, ஏப். 12—

குற்றத் தண்டனைகளுக்காக நீதிமன்றங்களில் 1948-ல் வசூலிக்கப்பட்ட அபராதத்தொகை 64,75,638 ரூபாயாகும். மூன் ஆண்டில் வசூலிக்கப்பட்ட தொகை 5476489 ரூபாய்தான்.

கிராமக் கோர்ட்டுகளில் 1581 வழக்குகள் விசாரிக்கப்பட்டு, 1352 வழக்குகள் முடிவு செய்யப்பட்டது.

பஞ்சாயத்துக் கோர்ட்டுகளில் விசாரிக்கப்பட்ட வழக்குகள் 11,172.மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் விசாரிக்கப்பட்ட வழக்குகள் 6,53,745.

மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்குகள் எண்ணிக்கை 1,11,212 லிருந்து 1,51,629-க்கு உயர்ந்துள்ளது.

செஷன்ஸ்கோர்ட்டுகள்

விசாரிக்கப்பட வேண்டிய வழக்குகள் 2106; இவைகளில் விசாரிக்கப்பட்டவை 1844 விசாரிக்கப்பட வேண்டியவை 262 குற்றக்கூண்டில் ஏற்றப்பட்டவர்கள் 5692. இவர்களில் கொலைக் குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டவர்கள் 1773, தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டவர்கள் 140 1166 பேர் விடுதலை செய்யப்பட்டு 467 பேர் தண்டனைகள் குறைக்கப்பட்டன.

உயர்நீதி மன்ற குற்றக் கோர்ட்டு

57 வழக்குகள் விசாரிக்கப்பட்டு எல்லா வழக்குகளும் முடிவுசெய்யப்பட்டன. இதில் 35 பேர் கொலைக்குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டு 13 பேருக்குத் தூக்குத் தண்டனை, 4 பேருக்கு ஆயுள் தண்டனை 4 பேருக்கும் பலதரப்பட்ட தண்டனை; 14 பேர் விடுதலை செய்யப்பட்டனர். தூக்குத் தண்டனை விசாரிக்கப்பட்ட 13 பேரில் 4 பேர் அப்பீல் விடுதலை செய்யப்பட்டனர்.

பெரிய குற்றவாளிகளின் எண்ணிக்கையும் 4576-லிருந்து 4757-க்கு உயர்ந்துள்ளது. இவர்களில் 4452 பேர் சிறுவர்கள், 305 பேர் சிறுமிகள்.

பணம் கொடுக்காமலே ஜமீன் ஒழிப்பு

சென்னை, ஏப். 12—

'ஜமீன்தார்களுக்குப் பணமாக சௌராஷ்டிர அரசாங்கம் நஷ்டஈடு தரப்போவதில்லை' யென்று சௌராஷ்டிரா நிதி மந்திரி தோழர் ஜி. பி. கோட்டா சென்னைக்கு வந்திருந்தபோது கூறினர். சௌராஷ்டிரா ஜமீன் ஒழிப்பு திட்டத்தின் பிரகாரம் ஜமீன்தார்களின் சொத்தில் ஒரு பகுதி அவர்கள் கையிலேயே இருக்குமென்றும், அதற்காக அவர்கள் குடியானவர்களிடம் அதிகக் குடிவாரம் பெறுவார்களென்றும் அவர் அறிவித்தார்.

எரிட்ரியா கலகத்தை ஒடுக்க முயற்சி

அஸ்மிரா, ஏப். 12—

எரிட்ரியாவில் கலகத்தை அடக்கி அமைதியை நிலைநாட்ட மேலும் இருகாலாட்படை பட்டாளங்களும், 2500 போலீஸ்காரர்களும் அனுப்ப வேண்டும் என்று பிரிட்டனை, பிரிட்டிஷ் கமாண்டர் கேட்டிருக்கிறார்.

எரிட்ரியாவின் ஒரு பகுதியைஅபிஸீனியாவிற்கு தர ஐ.நா. முடிவு செய்யாவிடில் வருகிற கோடையில் பயங்கர செயல்கள் உச்ச நிலையை அடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மலேயாவிலுள்ளதுபோல் கலகங்களை அடக்க பிரிட்டிஷ் விமானங்கள் எரிட்ரியாவில் உதவி செய்து வருகின்றனவாம்.

கலகப்படைத் தலைவர்டெகட்ஸேஹைலியைபிடித்துதருபவர்களுக்கு ரூ 6500 பரிசளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கட்டிடம்!

★

முறைப்படி காரியம் நடைபெறவேண்டும் என்றீர்கள்!

காரியாலயம் இல்லாமல் ஒரு கட்சி நடத்துவதா என்றீர்கள்!

தலைநகரிலே தங்க ஒரு இடம் இல்லையே என்றீர்கள்!

தலைமைக் காரியாலயம்! உடனே அமைத்தாலொழிய ஒழுங்காக, கழக வேலைகள் நடைபெறுவது என்று அனைவரும் கூறினீர்கள்!

தலைமைநிலையக் கட்டிடம் அமைக்க அன்பளிப்பு வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது.

குறைபட்ட தோழர்களே!
வற்புறுத்திய நண்பர்களே!
ஆர்வம்காட்டிய அன்பர்களே!
யோசனை கூறிய தோழர்களே!

அன்பளிப்பை அனுப்பிவிட்டீர்களா?

தி. மு. க. தலைமை நிலைய கட்டட நிதி

	ரூ அ. பை.
முன் வரவு	345—0—0
டபுள்யூ. கே. தேவராஜன், சென்னை	10—0—0
வி. புட்டாசாமி, காஞ்சிபுரம்	10—0—0
ந. தனுஷ்கோடி, திருமங்கலம்	2—0—0
சிவ. சண்முகம் முத்துலட்சுமி, கோவை	5—0—0
எஸ. கிருஷ்ணசாமி, மதுரை	2—0—0
மா. செயலட்சுமி, கூறைநாடு	1—0—0
சி. தியாகமுத்து, ஸ்ரீவைகுண்டம்	1—0—0
மா. வே. திருஞானசம்பந்தர், விழுப்புரம்	5—0—0
வி. ஓ அப்துல்ரஹீம், பெங்களூர்	10—0—0
எம். கண்ணன்—[illegible] ஆறுமுகம், பெங்களூர்	2—0—0
தி. மு. [illegible]ர் கிளை	10—0—0
சி. மாணிக்கம், ஜோலார்பேட்டை	2—0—0
தி. மு. க.-பல்லடம் நகர கிளை	10—0—0
அ. திராவிடமணி, தேனி	10—0—0
எஸ். சங்கரலிங்கம், ஆத்தூர்	3—0—0
தி. மு. க. திருச்சோறை கிளை	10—0—0
	438—0—0

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு

தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள்

(தொடர்ச்சி)

சோமரசம்பேட்டை
கோலார் தங்கவயல்—மைசூர்
திசையன்விளை
பொதத்தூர்பேட்டை
விநாராயணமங்கலம்
திமிரி
பாளையங்கோட்டை
கமுதி
பல்லடம்
இடைக்காட்டூர்
தஞ்சாவூர்.
கும்பகோணம்
பொள்ளாச்சி
நாகப்பட்டினம்
ஆனமலை
கோட்டூர்

அறிவிப்பு

அன்புடையீர்,

6-4-50 மாலைமணியில் "வேண்டுகோள்" என்ற தலைப்பின்கீழ் வெளிவந்த அறிக்கையை ஒட்டி பல மாவட்டங்களிலுள்ள பலதரப்பட்ட தோழர்களிடமிருந்தும், எனவே பயிற்சிபெற விரும்பும் தோழர்களிடமிருந்தும் கடிதங்கள் வந்து குவிந்தவண்ணமுள்ளன. இங்கு நடக்கும் பிரச்சாரப்பள்ளி, நாஞ்சில் மாவட்டத் தோழர்களுக்கு மட்டும் நடத்துவதாகும். மற்ற மாவட்டத்தை உள்ளடக்கிப் பயிற்சி வகுப்பு நடத்துமின்ற பெரும் முயற்சியில் ஈடுபடுகின்ற அளவுக்குள்ள வசதியோ, சந்தர்ப்பமோ, கும் இலையோ நாஞ்சில் மாவட்டத்தைப் பொறுத்தஅளவில் இல்லை. எனவே துடிப்புணர்ச்சியோடு பயிற்சிபெற ஆர்வங்கொண்டுள்ள ஏனைய மாவட்டத் தோழர்களின் இதய ஆர்வத்தை நிறைவேற்ற ம. தி. மு. க பிரசாரக்குழு செயலாளர் அவர்கள் பெரும்அளவு முயற்சி எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அன்பன்
கி. மனோகரன்
நா. ம. க. தி. மு. க. வி. உறுப்பினர்.

இனி நடப்பவை

சைதாப்பேட்டை, சென்னை:- மறுமலர்ச்சி சொற்பயிற்சி கூட்டம், 14-4-50 வெள்ளியன்று மாலை 6 மணிக்கு சடையப்ப முதலித் தெருவிலுள்ள 2-வது எண்ணுள்ள இல்லத்தின் மேல்மாடியில் நடைபெறும்.

* * *

தேனாம்பேட்டை, சென்னை:— நாடகக் கழகத்தின் சார்பில், நாசிரால் மைதானத்தில் 13-4-50 அன்று மாலை வைஜயந்தி மாலா நடனம் நடைபெறும்.

* * *

சென்னை, தேனாம்பேட்டை:— தமிழ் இளைஞர் கழகத்தின் மூன்றாவது ஆண்டு வேளாளத் விழாவும், ஹிந்து சட்ட மசோதா ஆதரிப்புக் கூட்டமும், 13-4-50 மாலை 5-மணிக்கு வேளாளத் தேனாம்பேட்டை கார்ப்பரேஷன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். கூட்டத்திற்குத் தோழர் முன்னாள் மந்திரி தோழர் எஸ். முத்தையா அவர்கள் தலைமைவகிப்பார். தோழர்கள் பி. என். அண்ணாதுரை என். வி. நடராசன், ராமலிங்கம், சத்தியானந்தம் ஆகியோர் பேசுவர்.

வார்டர்களைக் காப்பாற்றிய கைதி

பாரிஸ், ஏப். 12—

கில்லடின் மூலம் தலை துண்டிக்கப்படவேண்டும் என்று தண்டனை விதிக்கப்பட்ட அலெக்ஸாண்டர் குயுன்லுலட் என்பவர் தக்க சமயத்தில் செய்த உதவியால் இரு வார்டர்கள் உயிர் காப்பாற்றப்பட்டதுடன் தப்பமுயன்ற இரு போலீஸ் கைதிகளும் பிடிபட்டுவிட்டனர்.

தூங்கி எழுந்தபொழுது இவர் இரு போலீஸ் கைதிகள் இரு வார்டர்களைத் தாக்கி சாவியைக் கொடுக்கும்படி நிர்பந்திப்பதைக் கண்டார். காவல் விலங்கு இருந்ததால் தத்தித்தத்திச் சென்று கம்பிக்கருகில் சென்று கம்பி வழியே கையை நீட்டி ஒரு போலீஸ் கைதியைப் பிடித்துக்கொண்டார். இதற்குள் சப்தம் கேட்ட பிரதம வார்டர் உதவிக்கு வரவே, இரு கைதிகளையும் துரத்திச் சென்று பிடித்துவிட்டனர்.

மகராஜ்மறைந்தார்

டர்பன், ஏப். 12—

டர்பனில் பிரபல இந்தியத் தலைவரும், நேட்டால் இந்தியக் காங்கிரசை மகாத்மா காந்தி ஆரம்பித்ததை குறைத்தொன்று அதில் மெம்பராக இருந்து சமீபத்தில் உடல் நலமின்மை காரணமாக விலகிக்கொண்டவருமான தோழர் பி. ஏ. மகராஜ் தன் 80-வது வயதில் இங்கு காலமானார்.

காஷ்மீர் மத்யஸ்தராக 'ஆஸி' நீதிபதி நியமனம்

லண்டன், ஏப். 12—

காஷ்மீர் தகராறை மத்தியஸ்தம் செய்துவைக்க ஆஸ்திரேலியாவின் நீதிபதி ஸர் ஓவன்டிக்ஸன் நியமனம் செய்யப்பட்டிருப்பதை பாக்கிஸ்தான் அங்கீகரித்துவிடும் என்று இங்கு நம்பப்படுகிறது.

இந்நியமனத்தை இந்தியா ஏற்கனவேயே அங்கீகரித்துவிட்டது.

பாதுகாப்புக் கௌன்ஸில் தீர்மானத்தை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அமுல் நடத்த வேண்டும் என்று வாஷிங்டனிலும், இதர காமன்வெல்த் தலைநகர்களிலும் ஆவல் இருந்து வருகிறது.

இந்திய பாக்கிஸ்தான் பிரதமர்களின் உடன்படிக்கை காரணமாக லண்டன்கான்பெரா காமன்வெல்த் மாநாடு மாநாடும் வெற்றியில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகநாள் நீருள்யிருந்த யு. எஸ். சப்மரைன்

வாஷிங்டன், ஏப். 12—

பர்ல் ஹார்பருக்கு 5000 மைல் கடந்து 21 நாட்கள் தண்ணீருக்குள்ளேயே பிரயாணம் செய்ததின் மூலம், யுனைடெட் ஸ்டேஸ்ட் சப்மரீன் ஒரு ரிக்கார்டை ஏற்படுத்தியிருக்கிறது.

இதுவரை எந்த அமெரிக்க சப்மரீனும் இவ்வளவு தூரம் பிரயாணம் செய்ததில்லையாம்.

14—4—50 முதல்
சென்னை - ஸாகர் & ஸயானியில்
கோவிந்தன் & கம்பெனியாரின்
மருதநாட்டு இளவரசி

தினசரி 3 காட்சிகள் 2-45, 6, & 9-30

மேல் இரண்டு வகுப்பு டிக்கட்டுகளை இரு தியேட்டர்களிலும் பிரதிதினமும் காலை 9-மணி முதல் 12-மணி வரை முன்னதாக வாங்கிக்கொள்ளலாம்

கோவிந்தன் & கம்பெனி,
மதருஸ்-15

ஆசிரியருக்கு முடங்கல்

விவசாயிகள் வேதனை

ஐயா!

சென்றமாதம் அரிவாயபுரம் கிராமத்திற்குச் சென்றேன். தாமிரவருணிவாய்க்கால்பாசனம், இரண்டுபோக செல்வயிர், தொன்றுதொட்டு சிறந்த குடிகள் செம்மையாய் பயிரிட்டு விளைவில் முக்கால் பாகத்திற்கு மேல் எட்டுக்குத்தகையாக சோம்பேறி நிலக்காரருக்குக் கட்டி வருகிறார்கள். யுத்தத்திற்கு பிற்பாடு விவசாயச் செலவு அதிகம், வீட்டுச் செலவு அதிகம். 1947 ம் [illegible] ஏப்ரல் மாதம் குத்தகையில் [illegible]க்கால் பாகம் தள்ளிக்கொடுக்க ஜில்லா கலெக்டர் ஒப்பந்தம் செய்தார். அந்த மகசூலுக்குமாத்திரம் தள்ளிக்கொடுத்துவிட்டு, பழைய குத்தகையே வாங்கத் தொடங்கினார்கள். இவ்வாண்டு மழைக் குறைவால் விளைவு குறையவே, அந்த அரைக்கால் பாகத்தைத் தள்ளிக் கேட்டார்கள். மூன்று மிராசுதார்கள் தவிர, மற்றவர்கள் அப்படிச் செய்தார்கள். இந்த மூன்று மிராசுதார்களுக்காக, தோழர்கள் மக்கள், முத்தப்பாண்டியன், ஹரிஹர சுப்பிரமணியம் இத்தொண்டர்களும், அந்தக் கிராமத்து விவசாயிகளின் தலைவர்களும், சமாதான பங்கமில்லாத பொழுதும், கலகக்காரரென குற்றம் சாட்டப்பட்டு 10 நாள் கைது செய்யப்பட்டு, 107 செக்ஷனின் கீழ் நன்னடத்தைக்காக மறுபடியும் குற்றம் சாட்டப்பட்டு ஜாமீனில் வெளிவந்திருக்கிறார்கள். புதிய ஆண்டிற்கு வெளியாட்களை வைத்து பயிர் செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். 5—4—50 தேதியில் தோழர் சுப்பிரமணியம் 26 விவசாயிகளுடன்மறியல் சத்தியாக்கிரகம் செய்தார்கள். கைது செய்யப்பட்டனர். 6—4—50 தோழர் செல்வமணியம்மை தலைமையில் பெண்கள் மறியல் நடத்தினார்கள். பெண்கள் உள்பட நாயப்போல் சத்யாகிரகிகள் அடிக்கப்பட்டனர். போலீஸ்காரர்கள் வீடு, கடைகளில் நுழைந்து விவசாயிகளைச் செம்மையாய் அடித்தனர். ஒருமாதமாக செக்ஷன் 144 அமலில் உள்ளது. ரிஸர்வ் போலீசுக்கு வரி வசூல் செய்து மிராசுதார்கள் சாப்பாடுபோட்டு வருகிறார்கள். விவசாயிகள் இந்தத் திண்ணைச் சோம்பேறிகளுக்கும், நிலத்திற்கும் சம்பந்தமேயில்லாத நகரவாசிகளுக்கும், தாங்கள் கஷ்டப்படும் அரைச்சாண்வயிற்றை நிரப்பவும் தங்கள் குடும்பங்களைப் பட்டினிபோட்டும், உழைத்த குத்தகைக் கட்டும்படி கட்டாயப்படுத்த ரெவினியு அதிகாரிகளும், போலீஸ்காரரும் வெகு சிரத்தையுடன் பணிசெய்து செல்கின்றனர். விவசாயிகள் திருநெல்வேலி ஜில்லா கலெக்டருக்கும் ரெவினியு மந்திரிக்கும் மந்திரியின் மூலம் தீர்த்துவைக்கப் பல கடிதங்கள் எழுதினார்கள். ஒரு கிராமத்திலுள்ளமிராசுதார் 100க்கு 14 பாகமாகும். 100க்கு 86 குத்தகைக்காரரும் கவனிக்க ஆளுமே, இந்த மிராசுதார்கள் அறுவடை அறுப்புக் காலத்தில் குத்தகையை வசூலிக்க மட்டும் கிராமத்திற்கு வருவார்கள். அல்லது அவர்களின் ஏஜெண்டுகளை அனுப்புவார்கள். ஏகருக்கு குத்தகை 12 கோட்டை நெல்லு அதாவது ரூ 360 சர்க்கார் கிஸ்தி ரூ 3. கிராமமுழுவதையும் இந்த நிலக்காரருக்குக் குத்தகைக் கட்டவே உழைக்கவேண்டும்.

பயிர் விளைவு குன்றினால் விவசாயிக்குக் குத்தகை குறையாது. ஆனால் விவசாயத்தில் ஒருவிதமான கஷ்டமும் அடையாத நிலக்காரருக்கு சர்க்கார் வரிவஜா செய்கிறார்கள். உற்பத்தி விவசாயிக்காக கண்ட்ரோல் விலைக்கு என்று சர்க்கார் சொல்லுவார்கள் ஆனால் இந்தக் குத்தகைக்கு விடும் மிராசுதார்களுக்கு இதைக் கொடுத்து, இவர்கள் விவசாயிகளுக்கு கள்ளமார்க்கெட்டு விலைக்குவிற்கிறார்கள். நெல் விலையை அதிக விலைக்கு உயர்த்தினார்கள். ஏனெனில் நெல்லை விற்கும் மிராசுதார்களுக்கு அதிக லாபம் கிடைக்கவே. ஆனால் விவசாயிகளுக்குவிற்க நெல்கிடையாது. அவர்களுக்கு மாடு மாட்டுத்தீவனம் உரம், தோல்பரி, இவைகளின் விலை குறையவேண்டும் இவைகளெல்லாம் மினைத்த விலைக்கு விற்கலாம். அதிக லாபம் கள்ளமார்க்கட்டிலும், கண்ட்ரோல் மார்க்கெட்டிலும் சம்பாதிக்கும்நிலக்காரருக்கு வருமான வரி கிடையாது. ஒவ்வொரு மாகாணத்திலும் சால்வநாசத்திலுள்ள விவசாயிக்குக் குத்தகைவிளைவில் மூன்றில் ஒன்று என்று சட்டமுண்டு இங்கு குத்தகை விளைவில் $\frac{3}{4}$ அல்லது 4/5 ஆகும். நிலக்காரர்கள் தங்களுக்கு இஷ்டப்பட்டவருக்கு நிலத்தைக் கொடுக்கலாமென்றால், விவசாயிகளுக்கும் வேலை செய்யாமலிருக்கவும், அந்நியர்கள் பிரவேசித்தால் அவர்களைத் தடுக்கவும் சுதந்திரமுண்டு. இந்த மிராசுதார் சர்க்காரில் பந்தம் செய்து, போலீஸ்காரர்களால் அடிப்பட்ட சாத்விகப்போர் நடத்தி, பல கிராமங்கள் சேர்ந்து ஒத்துழைத்து நிலங்களைச் சாகுபடி செய்யாமல் போட்டுத்தான் உழவு சாத்தியத்தை குடியானவர்கள் நிலைநாட்ட வேண்டும் போலும்.

கே. ஜி. சிவசாமி
சென்னை, 8—4—50

நாட்டு நடப்பு

கபிலர் கலைக் கழகம்

அலவாக்கோட்டை, மார்ச். 29—

மேற்படி கழக அமைப்புக் கூட்டம் இன்று இரவு தோழர் சமையன் இல்லத்தில் தோழர் ச.ம.க. கருப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர் ச. பழனிவேலு, செயலாளர்கள் வீர. ஆண்டியப்பன் பெ. கருப்பையா, பொருள் உறுப்பினர்:— சின. பொன்னுச்சாமி, ஏனைய செயற்குழு உறுப்பினர் :— சம. ச. கருப்பையா, கரு. கிருட்டினன், பொ. மந்தச்சாமி, செ. செல்லையா.

வள்ளுவர் வாலிபர் கழகம்

பெங்களூர், ஏப். 4—

வ. வா. கழகத்தின் சார்பில் குறள் வகுப்பு துவக்கவிழா, 2—4—50 ஞாயிறு மாலை அரிசன சேவாசங்க விடுதியில் தோழர் ஜி. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. தலைவர் முன்னுரையில் திருக்குறளை ஒவ்வொரு தமிழனும் பயின்று அதை நல்ல முறையிலே நாட்டிலே பரப்ப வேண்டும் என்று குறிப்பிட்டார். குறள் வகுப்பு துவக்கவிழா சொற்பொழிவாற்றிய தோழர் தி. ரா. தர்மராசன் அவர்கள் குறள் சொல்லும் பொது உடைமையை ஒவ்வொரு மனிதனும் பின்பற்றினால், நாட்டில் கலிவு நீங்கி நல்லதோர் சமுதாயம் ஏற்படும் என குறளில் சில மேற்கோளைக்காட்டி நீண்ட நேரம் அறிவுரை ஆற்றினார். அடுத்துப்பேசிய தோழர் பூ. பார்த்தசாரதி அவர்கள், பழமையும் புதுமையும் எனும் பொருள்பற்றிப் பேசினார். தோழர் வே. இளஞ்சேரன், இளைஞர்கள் கடமை குறித்துப்பேசியபின் செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

வியாபாரிகள் சங்கம்

திருவில்லிபுத்தூர், ஏப். 6—

பொரி கடலை வியாபாரிகள் சங்க ஆரம்பக் கூட்டம் வெள்ளிங்டன் மார்க்கட் காம்பவுண்டுக்குள் 2-4-50 அன்று மாலை செயலாளர் தோழர் பெ. அய்யாச்சாமி தலைமையில் நடந்தது.

கீழ்க்கண்டவர்கள் நடப்பு ஆண்டு நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர் தலைவர்:-ஆ. சாமுவேல் நாடார், செயலாளர்.-செந்தியப்பன், பொருளாளர்:—ஆ. க. சுப்பம்மாள், நிர்வாகக் குழுவினர்:—மு. துரைராஜ் நாடார், மாடசாமி பிள்ளை.

வள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

செயங்கொண்டம், ஏப். 10—

9—4—50 மாலை, தி. மு. க. வள்ளுவர் சொற்பயிற்சி மன்றக் கூட்டம் நடைபெற்றது. அதுபொழுது தோழர் சே. காஜா உசேன் அவர்கள் தலைமை வகித்தார். அதுபொழுது "மதம் அவசியமா?" என்னும் பொருள் பற்றிப் பலர் பேசினார்கள். செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

மாணவர் கழகம்

சென்னை, மார்ச். 30—

மேற்படி கழக நான்காம் ஆண்டு நிறைவு விழா நகராண்மைக் கழக ஆண் பள்ளி சிந்தாதிரிப்பேட்டையில் 29—3—50 அன்று தோழர் துரைக்கண்ணு அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடந்தது. தோழர் ஆர். சீனுவாசம் வரவேற்புரை அளித்தார். தோழர் அன்பழகன் அவர்கள் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார். பரிசுகள் வழங்கப்பட்டு, தோழர் ஜி. சக்கரபாணி நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

அண்ணா மன்றம்

செயங்கொண்டம், ஏப். 6—

இம்மன்ற ஆண்டுவிழா, 5-4-50 அன்று மாலை சேவகத்தெரு வேலாயுதம் திடலில் சிறப்பாக நடைபெற்றது. அதுபொழுது தோழர் கே. என். இராமச்சந்திரன் அவர்கள் விழாவிற்குத் தலைமைதாங்கினார். தோழர் எஸ். இராமதாஸ் நாட்டு வாழ்த்துபாட, சடகோபன் ஆண்டறிக்கை படித்தார். தலைவர் அவர்கள் தன் முன்னுரையில் அண்ணா மன்றத்தின் அவசியம் குறித்தும், தோழர் அண்ணாத்துரை அவர்களின் தொண்டு பற்றி பேசி தோழர் ஆர். இராமசாமியை தோழர் அண்ணாத்துரை அவர்களின் படத்தைத் திறக்கும்படி கேட்டுக் கொண்டார்.

தோழர் ஆ. இராமசாமி படத்தைத் திறந்துவைத்தார். அடுத்துத் தோழர்கள் காசா உசேன், பாஸ்கரன், இராசகோபால் முதலியோர் அழகாகப் பேசினார்கள்.

தோழர் வை. ரத்தினசாமி பலவித விளையாட்டு போட்டிகளிலே, வெற்றிபெற்றவருக்கும் பரிசுகளையும், நன்மதிப்பிதழ்களையும் கொடுத்து போட்டியின் அவசியம் குறித்துப் பேசினார்.

தலைவர் அவர்களின் முடிவுரைக்குப் பிறகு, நன்றி நவிலப்பட்டு விழா இனிது முடிந்தது.

திருவள்ளுவர் இளைஞர் கழகம்

சொழும்பு, ஏப். 7—

இராமநாதபுரம் மாவட்டம் வேப்பங்குளம் டை கழகத்தில் 5-4-50 அன்று நடந்த மாதாந்தரப் பொதுக் கூட்டம் கழகத் தலைவர் தோழர் எஸ். முலையப்பன் தலைமையில் நடந்தேறியது. கூட்டத்தில் கழகக் கொள்கையின் அடிப்படை இலட்சியத்தைப் பற்றி தோழர்கள் வ. வீ.அ. சிதம்பரம், கு.மு. சுப்பையா விளக்கவுரையாற்றினார்கள். பின் வள்ளுவர் ஆண்டு விழாவை விரைவில் பேராசிரியர் தோழர் க. கணபதிபிள்ளை அவர்கள் தலைமையில் நடாத்தி வள்ளுவர் ஆண்டு விழாவு மலரும் வெளியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. தோழர் வீ. சண்முகம் அவர்கள் ஆண்டு விழாக் கொண்டாடி மலர் வெளியிடுவதின் அவசியத்தைப் பற்றி அழகாக விரிவுரையாற்றியபின், செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

பாராட்டு விழா

பொள்ளாச்சி, ஏப். 5—

4—4—50 அன்று நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தோழர் எம். ஏ. மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு ஆண்டுமுடிவை ஒட்டி ஒரு பாராட்டு விழா நடத்தினர். தோழர் பசுவிராஜ் இசைத்தார். தோழர் வி. ஜி. கந்தசாமி நல்வரவு கூறி ஆசிரியர் அவர்களின் நற்பண்புகளை விளக்கினார். முடிவில் ஆசிரியர் அவர்கள் தனக்களித்த பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்.

3-ம் படிவம் 6-ம் பிரிவினர் தங்கள் வகுப்பு ஆசிரியர் தோழர் எஸ். ஆர். கிருட்டிணன் அவர்களுக்கு ஆண்டுத் தேர்தலை ஒட்டி ஒரு பாராட்டு விழா நேற்று காலை நடத்தினர். தோழர் குமாரகோபால் வரவேற்பு கூறினார். ஆசிரியரைப் பற்றி தோழர் ம. மாரிசெட்டியார் மற்றும் பல மாணவர்களும் விரிவாகப் பேசினார்கள்.

மாணவர்களின் அன்பான பாராட்டைப் பாராட்டி ஆசிரியரும் நன்றி தெரிவித்தார் இத்துடன் விழா முடிவுற்றது.

ஹெப்ரான் மீது யூதர் தாக்குதல்

அம்மான், ஏப். 12—

ஹெப்ரானிலுள்ள எட்னா என்கிற ஒரு சிறு கிராமத்தில் யூதர்கள் விமானங்களைக் கொண்டு தாக்கியதாக கூட்டு யுத்த நிறுத்தக் கமிஷனுக்கு புகார் கிடைத்திருக்கிறது.

அங்கு நீண்ட காலமே அரபுகளுக்கும் யூதர்களுக்கும் தண்ணீர் சண்டை இருந்து வந்ததென்றும், இப்பொழுது ஒரு யூத காலாட்படை அக்கிராமத்தைத் தன் வசப்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இது பற்றி யூதக் கூட்டுக் கமிஷன் சீக்கிரமே விசாரிக்கும் எனத் தெரிகிறது.

கவலைப்படாதிருப்பதே நீண்ட நாள் வாழ வழி

லண்டன், ஏப். 12—

கவலைப்படாமல் சந்தோஷமாக இருந்த முடிந்த அளவுக்கு வேலை செய்து வந்தால் நீண்டகாலம் சுமார் 150 வருஷங்கள்கூட வாழ முடியும் என்பதை 'லான்டிஸைன்' என்கிற வைத்திய பத்திரிகையில் ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

குஷியாக இருப்பதே அதிக நாட்கள் வாழ தகுந்த வழியாகும் என்று சர்வதேச காங்கிரஸ் அபிப்ராயப்படுகிறது.

பீகிங்—வியட்னும் உடன்படிக்கை தயாராகிறது?

ஸ்தானிகர்கள் பரிவர்த்தனைக்கு ரஷ்ய சர்க்கார் அங்கீகாரம்

பாரிஸ், ஏப். 11—

சோவியத் வியட்னும் ஸ்தானகர்களை [illegible] தனை ஏற்பாட்டை ரஷ்யா [illegible]த்து விட்டது என்ற செய்தி விஷ்வின்ஸகி எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இருந்ததாக வியட்னும் ரேடியோ அறிவித்திருக்கிறது.

சோவியத்—வியட்னும் உடன்படிக்கை கையெழுத்தாகிவிட்டது என்பது சீக்கிரமே அறிவிக்கப்படும் என்று ராஜதந்திர நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஹோசிமின்கூட இன்னும் ரஷ்யாவிலேயே தங்கி மாஸ்கோ தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திவருகிறாரா என்று சந்தேகிக்கவேண்டியிருப்பதாகவோ செய்திகள் கூறுகின்றன.

ரஷ்யா வியட்னுமின் உடன்படிக்கை போலவே பீகிங்-வியட்னும் உடன்படிக்கையும் கையெழுத்தாகலாம் என்று கூறப்படுகிறது.

அரபு-யூத வட்டமேஜை மாநாடு

அம்மான், ஏப். 12—

அரபு-யூத வட்டமேஜை மாநாடு நடைபெறுவது சாத்தியமே என்றும், அதில் இரு தரப்பு தகராறுகளையும் தீர்க்க உறுப்படியான யோசனைகளைத் தான் சமர்ப்பிக்கலாம் என்றும் ஐ. நா. பாலஸ்தீன சமரஸக் கமிஷன் நம்பிக்கை கொண்டிருக்கிறது என்று குளோம் கிருபர் கூறுகிறார்.

இந்த வட்டமேஜை மாநாடு கமிஷனின் தலைவர் தயாரித்துள்ள ரகசியத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்றும், ஜீனிவா முட்டுக்கட்டையை தவிர்ப்பதற்காக கமிஷன் தலைவர் இந்தத் திட்டம் பற்றி அரபு நாடுகளுடன் கலந்து ஆலோசிக்கிறார் என்றும் ஒரு கமிஷன் மெம்பர் கூறுகிறார்.

அநேகமாக இந்த வட்டமேஜை மாநாடு ரோட்ஸ் தீவிலேயே நடைபெறலாம் என்று தெரிகிறது.

கமிஷன் தலைவரின் இம்முயற்சிகள் பலனளிக்கவில்லை என்றால் பாலஸ்தீன பிரச்னை மீண்டும் ஐ. நா. அசெம்பிளிக்கே போகவேண்டியிருக்கும்.

கீல்வாதத்திற்குச் சிகிச்சை



ஐந்து வயதுள்ள சிறுவனுக்கு ஏற்பட்ட கீல்வாதத்தை இயந்திர சாதனத்தைக்கொண்டு சிகிச்சை தருகிறாள் ஒரு மாது. சிறுவர்களின் பிற்காலத்திற்கு அமெரிக்காவில் பெரிதும் கவனம் செலுத்தப்படுகிறது.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

16 - 4 - 50

கரியாப்பட்டணம்:—என். வி. நடராசன்.

தென்கோவை:—ஆசைத்தம்பி.

பொள்ளாச்சி:—எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கபழம்.

சதுர வடிவான உப்[illegible]கள்

சென்னை மியூஸியத்திற்கு இரு கட்டிகள் வந்துள்ளன

சென்னை, ஏப். 12—

மேற்கு பாகிஸ்தானில் 'க்வேரா' என்ற இடத்திலுள்ள மலைகளில் சரிசம சதுர பிளாக்குகளாகவே (க்யூபிக்) உப்புக் கட்டிகள் அகப்படுவதாகத் தெரிகிறது. இவைகளில் இரண்டு கட்டிகள் ஸேம்பிலாக சென்னை மியூஸியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த உப்பு கட்டிகளின் நீளம், அகலம், குறுக்களவு சுமார் 6 அங்குலம் இருக்கின்றன. இவை இயற்கையிலேயே மேற்கு பஞ்சாப் மலைகளில் காணப்படுவதாகவும், இதை 'கேவாரா' சுரங்க என்ஜினீயர், பாகிஸ்தான் பூதத்துவ ஸர்வே இலாகா டைரக்டர் மூலம் சென்னை மியூஸியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவைகளை வெளியே வைத்தால் சீதோஷ்ணநிலையினால் கரைந்து விடுவதனால், மியூசியத்தின் அதிகாரிகள் ரஸாயண முறையில்பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்கின்றனர்.

இக் கட்டிகளின் மீது ஒரு விதமான திராவகம் தடவினால் இவை கரைந்துவிடாதாம். பிறகு இதைக் கண்ணாடிப் பெட்டிகளில் பொதுமக்கள் காணுவதற்கு மியூஸியத்தில் வைக்கப்படும்.

மிளகாய்மூட்டைகளில் கஞ்சா இலை!

பொரதட்டூர், ஏப். 12—

மிளகாய்மூட்டைகளில்மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட ரூ. 3000 மதிப்புள்ள 1440 தோலா கஞ்சா வைக்கொண்டபுரம் மதுவிலக்கு அதிகாரி தோழர் ஜி. சி. வெங்கட்ராமரெட்டி கைப்பற்றினார்.

இது சம்பந்தமாகச் சின்னப்பையா என்னும் பேர்வழி கைது செய்யப்பட்டார். மேலும் இருவர் இதே குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டனர்.

பிராணி, பட்சிகளை கொழுக்க வைக்க மருந்து!

லண்டன், ஏப். 12—

பன்றி, வான்கோழி, கோழிக்குஞ்சு இவைகளைச் சீக்கிரமே கொழு கொழுவென்று வளரச் செய்ய ஒரு புது மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் பெயர் 'ஆரோமைஸின்' என்பதாம். இரண்டு ரூபாய் மதிப்புள்ள இப்பொருளை வாங்கி ஒருடன் தீவனத்துடன் கலந்து பிராணிகளுக்கோ பட்சிகளுக்கோ கொடுத்துவிட்டால், அவை சாதாரணமாகக் கொழுத்து வளரும் காலத்திற்கு மிகவும் முன்னதாகவே நன்கு பருத்து வளர்ந்து விடுகிறதென்று டாக்டர்கள் ஸ்டோக்ஸ்டாட், ஜீக்ஸ் என்பவர் கூறுகிறார்கள்.

1904ல் எழுதிய கடவுளுக்கு உணவு என்கிற புத்தகத்தில் தோழர் எச்ஜி வெல்ஸ் இம்மாதிரி எளிதில் கொழுக்க வைக்கும் மருந்து இருந்தால் நல்லது என்று குறிப்பிட்டிருந்தார் இம்மருந்தினால் கோழிகள் அதிகமாக முட்டையிடவும் செய்யலாமாம்.

ஆம்ஸ்டர்டாம், ஏப். 12—

அமெரிக்காவுக்கு இந்தோனேஷிய நகரம் சப்ளை செய்வது பற்றி இருநாடுகளுக்குமிடையே நடைபெறும் பேச்சு வார்த்தைகள், கிட்டத்தட்ட முடிவடையும் கட்டத்தையடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.